செய்தி வெளியீடு எண்: 412 நாள்: 29.02.2024

<u>செய்தி வெளியீடு</u>

**வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் ரூ.210.75 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் கட்டடங்களை திறந்து வைத்து, கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கிய மூன்று விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறையின் சார்பில் 210 கோடியே 75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் அமையவுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கிய மூன்று விவசாயிகளுக்கு நம்மாழ்வார் விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

**<u>கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.8.2023 அன்று சுதந்திர தின விழாவில் ஆற்றிய உரையில், **சென்னையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் "கலைஞர் நூற்றாண்டு பூங்கா"** ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் கீழ் சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் அமைக்கப்படவுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**<u>கட்டி முடிக்கப்பட்டுள்ள வேளாண் கட்டடங்களை திறந்து வைத்தல்</u>**

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைக்காக தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் மூலம் விழுப்புரம் மாவட்டம் – மேல்சித்தாமூரில் 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக்கூடம்;

விழுப்புரம் மாவட்டம் – ஒலக்கூர் மற்றும் மாத்தூர், சேலம் மாவட்டம் – எடப்பாடி, உத்தமசோழபுரம், வாழப்பாடி, தலைவாசல் மற்றும் கொளத்தூர், ஈரோடு மாவட்டம் – அந்தியூர், கடலூர் மாவட்டம்– பண்ருட்டி மற்றும்

குறிஞ்சிப்பாடியில் 43 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதன்மை பதப்படுத்தும் மையங்கள்;

திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூரில் 5000 மெ.டன், செங்குன்றத்தில் 2000 மெ.டன், சேலத்தில் 1000 மெ.டன், கோயம்புத்தூர் மாவட்டம் – சூலூரில் 5000 மெ.டன், தூத்துக்குடியில் 2000 மெ.டன் மற்றும் தருமபுரி மாவட்டம் – கரகதஹள்ளியில் 5000 மெ.டன், என மொத்தம் 20,000 மெ.டன் கொள்ளளவில் 87 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குளிர்பதனக் கிடங்குகள்;

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை வட்டம், பாண்டி கிராமத்தில் 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக்கிடங்கு;

திருவண்ணாமலை மாவட்டம் – கீளூர் மற்றும் கொழப்பலூர், மயிலாடுதுறை மாவட்டம் – மாணிக்கபங்கு ஆகிய இடங்களில் 2 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துணை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள்;

சேலம் மாவட்டம் – உத்தமசோழபுரம், வேலூர், தென்காசி, அரியலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய இடங்களில் 4 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம் – பட்டுக்கோட்டையில் 5 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உலர்ந்த தேங்காய்தூள், குழந்தை பராமரிப்பு எண்ணெய், அழகு சாதன எண்ணெய் மற்றும் ஆரோக்கியத்திற்கான எண்ணெய் தயாரித்தலுக்கான மதிப்பு கூட்டுமையம்;

திண்டுக்கல் மாவட்டம் – ஒட்டன்சத்திரம், கடலூர் மாவட்டம்– பண்ருட்டி ஆகிய இடங்களில் 10 கோடி ரூபாய் செலவில் தலா 1000 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக்கிடங்குகள்; தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் 75 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய உழவர் சந்தைக் கட்டடம்;

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள தென்னை வணிக வளாகத்தில் 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள்; திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டில்

6 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வாழை ஏலம் மற்றும் மதிப்புக்கூட்டு மையம்;

வேளாண்மை துறைக்காக வேளாண்மை விற்பனை வாரியம் மூலம் இராணிப்பேட்டை மாவட்டம்– தக்கோலம், கரூர் மாவட்டம் – பஞ்சப்பட்டி, தருமபுரி மாவட்டம்– பாப்பாரப்பட்டி, கம்பைநல்லூர், அரியலூர் மாவட்டம் – அசவீரன்குடிக்காடு மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் – ஜமுனாமரத்தூர் ஆகிய இடங்களில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண் விரிவாக்க மையங்கள்;

திருவள்ளூர் மாவட்டம் – கும்மிடிப்பூண்டி மற்றும் பள்ளிப்பட்டு, மதுரை மாவட்டம் – கொட்டாம்பட்டி, சிவகங்கை மாவட்டம் – இளையாங்குடி, ஈரோடு மாவட்டம் – கோபிச்செட்டிப்பாளையம், இராமநாதபுரம் மாவட்டம் – சத்திரக்குடி மற்றும் நயினார்கோயில், விழுப்புரம் மாவட்டம் – முகையூர், நாகப்பட்டினம் மாவட்டம் – கீழ்வேளூர் மற்றும் கீழையூர், அரியலூர் மாவட்டம் – செந்துறை, திருவண்ணாமலை மாவட்டம்– கீழ்பென்னாத்தூர், அனக்காவூர் மற்றும் பெரணமல்லூர், நாமக்கல் மாவட்டம் – எலச்சிப்பாளையம், தஞ்சாவூர் மாவட்டம்– திருவையாறு ஆகிய இடங்களில் 38 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் வேளாண் பொறியியல் துறை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தால் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள்;

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் செயல்விளக்க பூங்காவில் 1 கோடியே 74 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள திசுவளர்ப்பு ஆய்வகம் மற்றும் தங்கும் விடுதி;

**என மொத்தம் 210 கோடியே 75 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வேளாண் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

<u>நம்மாழ்வார் விருது வழங்குதல்</u>

வேளாண்மை – உழவர் நலத்துறையின் 2023–24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், உயிர்ம வேளாண்மையில் நம்மாழ்வார் அவர்கள் ஆற்றிய பெரும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், உயிர்ம வேளாண்மையில் ஈடுபடுவதோடு, அதனை ஊக்குவித்து பிற உயிர்ம விவசாயிகளுக்கும் கைகொடுக்கும்

விவசாயிகளுக்கு **தமிழ்நாடு அரசால் "நம்மாழ்வார்' பெயரில் விருது வழங்கப்படும்** என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, உயிர்ம வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகள் – தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. கோ. சித்தர் அவர்களுக்கு முதல் பரிசாக 2.50 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் மற்றும் 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பதக்கமும், திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு.கே.வி. பழனிச்சாமி அவர்களுக்கு இரண்டாம் பரிசாக 1.50 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் மற்றும் 7 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பதக்கமும், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த திரு.கு.எழிலன் அவர்களுக்கு மூன்றாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகையும் மற்றும் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பதக்கமும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முதன்மைச் செயலாளர்/ ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திரு. பி. குமாரவேல்பாண்டியன், இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. பி.முருகேஷ், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சேக் மொகிதீன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.............

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in